டோனி அலமோ கிறிஸ்தவ ஊழியங்கள்

உலக செய்தி மடல்

புதிய எருசலேம் உலகளாவிய திருச்சபைகள்

போதகர் டோனி அலமோ அலமோ கிறிஸ்தவ மண்டலம் தொகுதி 12700

# கிறிஸ்துவை நீ கொண்டிருந்தால்



*புகைப்படங்கள் 1971: போதகர் அலமோ பசிபிக் சமுத்திரத்தில் அதிகாலைமுதல் அஸ்தமனம் ஆகி, இரவாகும் வரை ஞானஸ்நானம் தருதல்.*

**டோனி அலமோ**

இயேசுவை நாம் எவ்வளவு அதிகமாக அறிகிறோமோ, அவ்வளவு அதிகமாக அவர் நமக்குப் போதுமானவராயிருப்பார் என்பதை அறிவோம். நாம் கிறிஸ்துவைப் பின்பற்றி நடக்கவேண்டுமானால், நாம் இவ்வுலகம் சொல்வதைக் காட்டிலும் வித்தியாசமாக வாழவேண்டும். அதனால் நமக்குக் கிடைப்பதோ ஈடுஇணையற்ற மகிமையின் முத்திரை ஆகும்.

இயேசுவைக் காணவேண்டுமானால், பிதாவைக் காணவேண்டும்.[1] “பிலிப்பு அவரை நோக்கி: ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும்” என்றான். “அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனே கூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்கிறாய்?” (யோவான் 14:8,9).

மனிதர்களாகிய நாம் எல்லாவற்றையும், வேதவசனத்தினால் நியாயந்தீர்க்க வேண்டியிருக்கிறது[2] “என்னைத் தள்ளி என் வார்த்தைகளை நியாயந்தீர்க்கிறதென்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்” (யோவான் 12:48).

நமக்குள்ள எல்லாவற்றிற்காகவும், தேவனுக்கு நாம் எப்போதும் நன்றியறிதலுடையவர்களாக இருக்க வேண்டும்.[3] தேவனுக்குரியவைகளை, உங்களுக்குப் போதிக்க, அவரிடம் கேளுங்கள். தேவனுடைய வசனத்தோடு எப்படி நடக்க வேண்டும் என்பதை, வேதவசனமும், பரிசுத்தாவியும் நமக்குப் போதிக்கிறது. ஓய்வுநாளில் ஓய்வுநாள் மட்டுமல்ல ஒவ்வொரு நாளும், ஓய்வுநாளாயிருக்கிறது.[4] நாம் நம் பழைய தீயவழிகளை விட்டு, ஓய்வுநாளில் தேவனிடத்தில் இளைப்பாற வேண்டும் (எபிரேயர் 4:1-11).

பரிசுத்த ஆவிக்காக என் ஆத்துமாவில் பரிசுத்த அனல் கொழுந்துவிட்டெரிகிறது. (கலாத்தியர் 6:2) கூற்றுப்படி, ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, பிறர் சிலுவைகளைச் சுமந்துவர மனதாயிருங்கள். இயேசு பிணியாளிகளுக்காவே வந்தார், சுகமுள்ளாவர்களுக்காக அல்ல! (மாற்கு 2:17)ல் இயேசு, “பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்ப அழைக்க வந்தேன்” என்றார்.

கத்தோலிக்க சபையினர் இரு நியாயத்தீர்ப்புகள் இருப்பதாக நம்புகின்றனர். முதலாவது கழுவாய் நிலையில் இருப்பது. இது உண்மையன்று. அங்கு கழுவாய்நிலை (purgatory) இல்லை![5] கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது, “அன்றியும் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே” [நியாயந்தீர்ப்பு மறு பிறப்பு அல்ல] என்று (எபிரேயர் 9:27) நித்திய வாழ்வு என்பது என்றென்றும் இருப்பதாகும். கத்தோலிக்கர் அதிகமான மூடநம்பிக்கை உடையவராயும் கள்ள உபதேசங்கள் உடையவராயும் இருக்கின்றனர்.

நீங்கள் மறுபடியும் பிறந்தவராயிருந்தால் பாவத்திற்குள்ளாக மாட்டீர்கள். “பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்,[6] ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்” (1 யோவன் 3:8). நாம் பாவிகள் அல்லர். ஆனால் தேவனுடைய புத்திரர்கள், ராஜாக்களும் ஆசாரியர்களுமான ஒரு ஜனம்! “எவர்கள்

*(பக்கம் 2 ல் தொடர்கிறது)*

**1.** யோவான் 8:19, 10:30, 38, 14:7-11, 20, 23, 15:24, 17:21 **2.** கொரி 2:12-16, 6:1-4 **3.** சங் 100:4, ரோமர் 1:21, எபேசி 5:2-5, 17-20, கொலோ 1:10-13, 3:15-17, 1 தெச 5:18 எபி13:15 **4.** மத் 11:28-30, ரோமர் 8:1-6, எபி 4:9-10 **5.** மத் 25:31-46, எபி 9:27, 10:26-29, வெளி 20:12-15 **6.** ரோமர் 6:1-4, கலா 2:16-20, 1யோவான் 3:9

# கிறிஸ்துவை நீ கொண்டிருந்தால்

*(பக்கம் 1 லிருந்து தொடர்கிறது)*

தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" என்று (ரோமர் 8:14) கூறுகிறது. "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்துக்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை, அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும் பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1 பேதுரு 2:9).[7]

மத்தேயு 10:40ல் இயேசு; "உங்களை ஏற்றுக்கொள்கிறவன், என்னை ஏற்றுக்கொள்கிறான். என்னை ஏற்றுக்கொள்கிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்கிறான்". கர்த்தருடைய வார்த்தையை அப்படியே போதிக்கும் என்னை, டோனி அலமோவை ஏற்றுக்கொள்ளைவில்லையென்றால், நீங்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளவில்லை, நீங்கள் பிதாவையும் ஏற்றுக்கொள்ளவில்லை, இயேசு சொன்ன வாக்கிற்கிணங்க எங்களைப் பலர் ஏற்றுக்கொள்கிறார்கள்.

அவரை அறிந்தவர்களை விட்டு அவர் விலகுவதில்லையென்று மக்கள் தவறாகக் கூறுகிறார்கள்.[8] ஆனால் பலர், தங்கள் வாழ்வில் பிசாசு உள்நுழைந்து, பின்பு தம்மைப் பயன்படுத்த அனுமதிக்கிறார்கள்.[9] கர்த்தருடைய சமூகமும் கர்த்தருடைய ஆவியும் அவர்களை விட்டு விலகியதை அவர்கள் "அறியாதிருந்தார்கள்"![10]

காத்திருக்கிறவர்களை நன்மைகள் தேடிவரும். "உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்" (லூக்கா 21:19). ஏன் கத்தோலிக்கர் லத்தீன் மொழியைப் புனிதமென்று கூறுகின்றனர்? வேதாகமம் ரோமர்களால் எழுதப்படவில்லை எபிரேய, அராமிக் பேசிய எபிரேயராலும், ஹெல்லானிக் கிரேக்கம் பேசிய யூதர்களாலும் எழுதப்பட்டதே. புனித வேதாகமத்தை எழுத, தேவ ஆவியைப் பெற்ற யூதர்களைத் தான் தேவன் பயன்படுத்தினார், ரோமர்களை அல்ல! பேதுரு ஒருபோதும் போப் அல்ல! அவன் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களுள் ஒருவனும், இயேசுவின் சீஷர்களுள் ஒருவன் மட்டுமே.[11] இயேசு கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் கள்ளப்போதகத்துக்கும் விலகி இருக்கும்படி எச்சரிக்கிறார்.[12] "கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள், அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள், உள்ளத்திலோ பட்சிக்கிற ஓநாய்கள்" (மத்தேயு 7:15).

பழைய ஏற்பாட்டில் தேவன் ஒரு மனைவியைத்தான் விவாகம் செய்யவேண்டுமென்று சொல்லவில்லை.[13] நிறைய

*(பக்கம் 4 ல் தொடர்கிறது)*

**7.** வெளி 1:6, 5:10 **8.** உபா 31:16-18, யோசுவா 24:20, 1சாமுவேல் 15:16-28, 1கொரி28:9, எசேக் 33:12, 13, மத் 12:43-45, லூக்கா 9:62, யோவான் : 15:6, 1நாளா 28:9, கொலோ1:21-23, 2தீமோ 2:12, எபி 3:6-19, 4:1-11, 6:4-8, 10:25-31 38-39, 2பேது 2:20-22, 2 யோவான் 9, யூதா 5-6, வெளி 2:4-5, 3:2-3 **9.** 1சாமு 15:11, 16:14, 28, 7-9, 31:1-6, 1ராஜா 3:3-14, 9:1-9, 11:1-34, மத் 10:1-4, 26:14-16, யோவா13:1-2, 21-27, 18:1-5, 2பேது 2:18-22, **10.** நியா 16:20 **11.** மத் 10:2, லூக் 6:13-14, 1பேது 1:1, 2பேது 1:1 **12.** மத் 16:6-12, 24:11,24, மாற்கு 8:15-21, 12:38-40, 13:21-23, லூக் 12:1-2, 20:46,47, 2பேது 2:1 **13.** யாத் 21:10, உபா 21:15-17, 25:5-6, நியா 8:30, 12:8-9, 13-14, 2சாமு 3:2-5, 5:13-16, 12:7-8, ஏசா 4:1, மத் 5:17, 1தீமோ 4:1-3

# போதகர் அலமோவிற்கு வந்தகடிதங்கள்

## சாம்பியா

தேவ ஊழியர்களே,

உங்கள் எழுத்துக்கள் மூலமாக பலர் வாழ்வில் கர்த்தர் செயல்பட்டதற்காக நான் அவரைப் போற்றும்முகமாக இக்கடிதத்தை எழுதுகிறேன். இந்த எழுத்துக்களை வாசித்த பலர் தங்கள் வாழ்வை இயேசு கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்தார்கள். மற்றவர்கள், தங்கள் விசுவாசத்தில் எழுச்சியடைந்து அப்படிப்பட்ட ஆசிர்வாதத்துக்காக இன்னமும் துதித்துக் கொண்டேயிருக்கின்றனர். உங்கள் எழுத்துக்களால் நான் ஒரு சுவிசேஷனாக மாறிவிட்டேன் என்ற உண்மையைத் தாழ்மையுடன் தெரிவிக்கிறேன். நான் தேவ செய்தியை மக்களுக்கு அறிவித்து வருகிறேன். அதனுடன், என் சொந்தவீடு மக்கள் தேவவசனத்தை அறியும் இடமாகிவிட்டது என்னும்போது நான் இன்னும் தாழ்மைபடுகிறேன். தேவன் ஒரு ஒதுக்குப்புறமாக இருக்கும் என் ஊருக்குப் பல திசைகளிலிருந்தும், அண்டை பகுதிகளிலிருந்தும் மக்களை அழைத்துவந்து, தங்கள் எழுத்துக்களின் நற்செய்தியைப் பெற ஜெபத்துடனும் கவனத்துடனும் வழங்கிட உதவ வேண்டும். உங்கள் எழுத்துக்களை இன்னும் அனுப்புவதில் இந்த எல்லை மட்டும் விரிவுபடுத்தினால், அது பலபகுதிகளுக்கும் சென்றடையச்செய்வதில் கர்த்தர் எங்களைப் பயன்படுத்திட முடியுமென்பது, எங்கள் ஜெபமாயிருக்கிறது. நீங்கள் அதிகமான தலைப்புகளில் அனுப்பினால் உங்கள் எழுத்துக்களை, தேவ ஊழியர்கள் மூலம் பல ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும் உன்னதப்பணியை, இன்னும் ஆழமான ஈடுபாட்டுடன் செய்ய இயலும். உங்கள் எழுத்துக்கள் எங்கள் தேசத்தின் மறக்கப்பட்ட பகுதிகளைச் சென்றடைய வேண்டும் என்பது எங்கள் ஜெபமாய் இருக்கிறது. தயவுசெய்து "உலர்ந்த எலும்புகள்" "கடினமான மலை" "உங்களை அணைத்திடுங்கள்" "போப்பின் ரகசியங்கள்" "வத்திகானின் ஆசிர்வாதங்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்" ஆகிய தலைப்புகளில், 3000 பிரதிகள் அனுப்பிட வேண்டுகிறேன்.

உங்கள் செய்தி, முழு உலகும் சென்றடையவும், அதன் மூலம் நல்லதெய்வம் அதிக அதிகமாய் ஆசிர்வதிக்கவும், உங்கள் ஊழியங்களுக்காகவும் அதிகமாய் ஜெபிக்கிறோம், இச்செய்திகளை நான் பிறருக்கு வழங்கிட ஆசிப்பதின் மூலம், தனிப்பட்ட முறையில் உங்கள் பெரிய அழைப்பில் நானும் ஒரு பங்காகிறேன்.

சூரியனுக்குக் கீழே நீங்கள் நடத்தும் இந்த ஊழியத்துக்கு நம் நல்லதெய்வம் உங்களை அழியாத நித்தியத்தின் மகிமையினால் மேலும்மேலும் ஆசீர்வதிப்பாராக. உங்கள் கைகளின், ஊழியத்தின் முயற்சிகளையும் உங்கள் குடும்பங்களையும் கர்த்தர் அதிகதிகமாய் ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவுக்குள் உங்கள்,

சைலீஷ் ஆமோஸ் முசலமா — மிபலுங்கு, சாம்பியா ஆப்ரிக்கா

## டெக்ஸாஸ்

அன்பார்ந்த போதகர் டோனி அலமோ அவர்களே!

எனக்கு, கிறிஸ்தவ நற்செய்தி இசை மிகவும் பிடிக்கும். அது மிகவும் ஆவிக்குரியது. தேவன் திட்டமிட்டபடி, நீங்கள் எழுப்புதல் கூட்டத்தில் வாசித்தீர்கள் என்று நம்புகிறேன். அருமையாக இருந்தது. நான் 12 அல்லது 15 வயதாக இருந்தபோது தொலைக்காட்சியில் உங்களையும் சூசனையும் பார்த்தது நினைவிருக்கிறது, நாங்கள் ஆறு குழந்தைகளாய் இருந்தபடியால் ஒரே தொலைக்காட்சிப்பெட்டியைப் பார்த்தோம். உங்களை மூன்று நிமிடங்கள் தான் பார்த்தேன், ஆனால் உங்கள் அற்புதமான கிறிஸ்தவ நிகழ்ச்சியை நான் மறக்கவே இல்லை.

அன்புடன், ஒய்சேலா — எல் பாஸா, டெக்ஸாஸ்

# ஜெர்மனி

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே!

தேவனும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நான் தாழ்மையுடன் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன், நான் உங்கள் இணையதளத்தைப் பார்த்தேன், அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. உங்களுக்கு இயன்றால் என்னோடிருப்பவர்களுக்குப் பகிர்ந்துகொள்ள, கிறிஸ்தவ வெளியீடுகளான செய்திமடல்கள், “மேசியா” புத்தகம், வேதாகமம் ஆகியவற்றை அனுப்பினால் நான் மகிழ்வேன். நான் சிறையில் உள்ள மக்களைப் பார்க்கப் போவேன், உங்கள் போதனைகளை அவர்கள் விரும்புவார்கள் என்றெண்ணுகிறேன். என் கடிதம் கண்டவுடன் பதிலளித்தால் நன்றியுடன் இருப்பேன்.

கர்த்தரில் ஆசீர்வாதமாய் இருங்கள்.

ஆன்டர் ஜே ஸ்கேன்சா

னகிட் அகஸ்டின் ஜெர்மனி

# உகாண்டா

ஒரு நண்பரிடமிருந்து உங்கள் செய்தி மடல்களில் ஒன்றைப் பெறும் வாய்ப்பு கிடைத்தபோது, நான் இருளிலிருந்து வெளிச்சத்துக்கு என் ஆன்மா அடைந்தது போன்று உணர்ந்தேன். அது என் வாழ்வு முழுவதையும் மாற்றியது. இன்னும் சில செய்திமடல்கள் தேவைப்படுகிறது. அது உகாண்டர்கள், தேவ வல்லமையை அறிந்துகொள்ளும் துவக்கமாக இருக்கும். நான் இரட்சிக்கப்பட்டு, கர்த்தரை நேசித்து, என் எஞ்சியுள்ள வாழ்வை, அவர் சேவையில் அர்ப்பணிக்க வாஞ்சிக்கிறேன்.

கர்த்தர் உங்களை அதிகதிகமாய் ஆசீர்வதிப்பாராக.

ஓஹியன் ஹெட்ரின்

கம்பாலா, உகாண்டா, ஆப்ரிக்கா

# இந்தியா



இந்தியா ஆந்திரபிரதேசத்தில் : சுவிசேஷகர் ஜி. பிரசாந்த் ஹென்றியும் சபையாரும் போதகர் அலமோவின் செய்திமடல்களை விநியோகம் செய்தல்.

கிறிஸ்துவுக்குள் அன்பார்ந்த தேவபிள்ளையே!

நம் இரட்சகரும் தேவனுமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கும், டோனி அலமோ கிறிஸ்தவ ஊழியங்களின் உறுப்பினர்களுக்கும், எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்!

புத்தகங்களின் விநியோகம் பற்றிய புகைப்படங்கள் உங்களுக்குக் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன். என் நற்செய்தி பணியிடங்களில் உங்கள் புத்தகங்கள் மிகவும் பயனுள்ளதாக இருந்தன. கிறிஸ்துவுக்காக, ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய அது ஒரு வல்லமையான கருவியாக இருந்தது. இந்தப் புறஜாதிகளின் தேசத்துக்கு, தேவனுடைய ராஜ்ஜியத்தை நிறுவுவதற்கு, உங்கள் புத்தகங்களைத் தொடர்ந்து அனுப்பும்படி வேண்டுகின்றேன்.

இந்தப் பூமியில் தேவனுடய ராஜ்ஜியம் நிறுவப் பாடுபடும் டோனி அலமோ ஊழியங்களைச் சார்ந்த ஊழியர்கள், உங்கள் குடும்பத்தினர், அனைவருக்காகவும் ஜெபிக்கிறேன். விரைவில் உங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன். ஜெபத்துடன் வரும், உற்சாகமூட்டும் உங்கள் பதில், தேவமகிமைக்கென்று நாங்கள் செய்யும் ஊழியத்தை இன்னும் வலுவூட்டும். நன்றி கூறும்,

பிரசாந்த் ஹென்றி,

நற்செய்திப் பணியாளர்,

ஹார்வெஸ்ட் இந்தியா ஊழியங்கள்,

கோதாவரி மேற்கு மாவட்டம்,

ஆந்திர பிரதேசம், இந்தியா

# பாகிஸ்தான்

அன்பார்ந்த போதகர் டோனி அலமோ,

நீங்கள் ஆற்றும் அற்புதமான ஊழியத்துக்காக கர்த்தரைத் துதிக்கிறேன். அஞ்சல் மூலம் உங்கள் நற்செய்திகளைப் பெற்றேன், அவை எனக்கு ஆவிக்குரிய அறிவையும், ஆவிக்குரிய வளர்ச்சியும் தந்ததற்காக நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். என் நண்பர்கள் சிலருக்கு அந்த நற்செய்தியைக் காட்டியபோது, அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்து, ஜீவனுள்ள தேவனின் வார்த்தையைப் பரப்புவதில் மிகவும் ஆர்வம் காட்டினர். தயவுசெய்து ஒவ்வொருமாதமும் தொடர்ந்து, உங்கள் நற்செய்தியை அனுப்புவதுடன், “மேசியா” புத்தகத்தையும் அனுப்பி வையுங்கள். நாங்கள் இரட்சிக்கபடாத ஆத்துமாக்களிடம் தேவசெய்தியையும் உங்கள் செய்தியையும் பகிர்வதால், எங்களுக்காகவும், எங்கள் நண்பர்களுக்காகவும் தயவுசெய்து ஜெபியுங்கள். கர்த்தர் நம் எல்லாரையும் ஆசீர்வதிப்பாராக. உங்கள் செய்திகளை எனக்கு அனுப்பிய போதகர் டோனி அலமோவுக்கு, மீண்டும் நன்றிகூறுகின்றேன்.

எம்.எம்

கராச்சி, சிந்த், பாகிஸ்தான்



ஆன்லைன் அலோமா திருச்சபை அமைச்சரகம்

www.alamoministries.com

# ஸ்காட்லாந்து

அன்பார்ந்த ஊழியரே!

உங்களிடம் ஒரு சிறந்த இணையதளம் உள்ளது; உண்மையான புராட்டஸ்டன்ட் இணையதளம். தயவுசெய்து ஒரு வேதாகமும், உங்கள் எழுத்துக்களையும் அனுப்புங்கள். கர்த்தர் உங்களோடிருப்பாராக.

மேரி

கிளாஸ்கோ, ஸ்காட்லாந்து, யு கே

# கிறிஸ்துவை நீ கொண்டிருந்தால்

(பக்கம் 2 லிருந்து தொடர்கிறது)

பரிசுத்தவான்களுக்கு ஒரு மனைவிக்கு மேல் இருந்தனர்.[14] ஒரு பெண்ணுக்கு ஒரே ஒரு கணவனும் இருக்கலாம்.[15] தேவன், இயேசு இதைக் கண்டிக்கவில்லை, ஆனால் அவர் ஒரே பாலின திருமணங்களையும், ஒரே பாலின உறவுகளையும் கண்டித்தார்.[16]

இயேசு தேவனின் வார்த்தையாயிருந்தார், (யோவன் 1:1,14) இயேசுவை அறிய, கர்தருடைய வார்த்தையை அறிய வேண்டும். இயேசுவே, வார்த்தை, பரிசுத்த ஆவி, நித்திய வாழ்வாயும் இருக்கிறார். நித்திய வாழ்வு உங்களுக்குள் வர கிறிஸ்து ஆவியாக உங்களுக்குள் இருக்க வேண்டும். இதை அடைய இந்த ஜெபத்தைச் சொல்லவும்.

**என்னுடைய தேவனே என் ஆண்டவரே, நான் ஒரு பாவி என் ஆத்துமா மீது இரக்கம் வையும்.[17] இயேசு கிறிஸ்துவே ஜீவனுள்ள தேவனின் குமாரன் என்பதை நான் விசுவாசிக்கிறேன்.[18] என்னுடைய முந்தைய பாவங்களை மன்னிக்கும்படியாக அவர் சிலுவையில் மரித்து விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிந்தினார் என்பதையும் விசுவாசிக்கிறேன்.[19] பரிசுத்த ஆவியின் வல்லமையினால் தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்பதையும் விசுவாசிக்கிறேன்,[20] எனவே அவர் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து என்னுடைய அறிக்கையையும் இந்த ஜெபத்தையும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.[21] நான், இதயத்தின் கதவைத் திறந்து ஆண்டவர் இயேசுவே உம்மை நான் என் இதயத்தினுள் அழைக்கிறேன்.[22] கல்வாரியிலே என்னுடைய இடத்திலே நீர் சிந்திய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் என்னுடைய அசுத்தமான பாவங்கள் அனைத்தையும் கழுவியருளும்.[23] கர்த்தராகிய இயேசுவே என்னைப் புறம்பே தள்ளமாட்டீர்; என் பாவங்களை மன்னித்து எனது ஆத்துமாவை மீட்டருள்வீர். நான் அதை அறிவேன் ஏனென்றால் உம்முடைய வார்த்தையான பரிசுத்த வேதாகமம் அப்படிச் சொல்கிறது.[24] நீர் ஒருவனையும் புறம்பே தள்ளுவதில்லை என்று உம்முடைய வார்த்தை சொல்கிறது, அதில் நானும் அடங்கியிருக்கிறேன்.[25] ஆகையால், நீர் எனக்குச் செவிகொடுத்திருக்கிறீர் என்பதை அறிவேன், மற்றும் நீர் எனக்குப் பதிலளித்தீர் என்பதையும் நான் அறிவேன்.[26] என்னுடைய ஆத்துமாவை இரட்சித்ததற்காக இயேசு ஆண்டவரே, நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன் மேலும் நீர் கட்டளையிட்டவைகளைச் செய்தும் இனிமேல் பாவம் செய்யாமலும் என்னுடைய நன்றியைக் காண்பிப்பேன்.[27]**

இரட்சிப்பிற்குப் பிறகு, ஜலத்திலே முழுவதுமாக மூழ்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் எடுங்கள் என்று இயேசு கூறினார்.[28] கிங் ஜேம்ஸ் பதிப்பு வேதாகமத்தைக் கவனமாகப் படித்து அது சொல்வதைச் செய்யுங்கள்.[29]

உங்கள் இரட்சிப்பைக் குறித்து பிறரிடம் சொல்ல வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். போதகர் டோனி அலமோ அவர்களின் சுவிசேஷ பிரசுரங்களைக் கொடுக்கிறவர்களாக மாறலாம். பிரசுரங்களை நாங்கள் உங்களுக்கு இலவசமாக அனுப்பி வைப்போம். இன்னும் அதிகப்படியான தகவலுக்கு எங்களை அழையுங்கள் அல்லது மின்னஞ்சல் செய்யுங்கள். இந்தச் செய்தியைப் பிறரோடும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

இந்த உலகம் இரட்சிப்படைய நீங்கள் விரும்பினால், இயேசு கட்டளையிட்டது போல, தேவனை, அவருடைய தசமபாகத்திலும் காணிக்கையிலும் வஞ்சிக்காதிருங்கள். தேவன் சொன்னார், "மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் [இந்த முழு உலகமும்] என்னை வஞ்சித்தீர்கள். என் ஆலயத்தில் [இரட்சிப்படைந்த ஆத்துமாக்கள்] ஆகாரம் [ஆவிக்குரிய ஆகாரம்] உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் [உங்கள் மொத்த வருமானத்தில் பத்தில் ஒரு பங்கு] பண்டகசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசிர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார். பூமியின் கனியைப் பட்சித்துப்போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன்; அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை, வெளியிலுள்ள திராட்சக்கொடி பழமில்லாமற்போவதுமில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார். அப்பொழுது எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான்கள் என்பார்கள்; தேசம் விரும்பப்படத்தக்கதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார்" (மல்கியா 3:8-12).

---

**14.** ஆதி 16:1-3, 25:6, 29:20-29, 30:4, 9-10, யாத் 2:21, எண் 10:29, 12:1, நியா 8:30-31, 1சாமு 1:1-3, 25:39-44, 2சாமு 3:2-5, 5:13, 15-16, 1நாளா 1:32, 2:46-48, 14:3, 2நாளா 13:21, 24:2-3, ஓசியா 1:2-3, 3:1-2 **15.** லேவி 20:10, மத் 5:32, 19:3-9, ரோமர் 7:1-3, 1 கொரி 7:39 **16.** ஆதி 19:1-13, 24,25, லேவி 18:22, 20:13, உபா 23:17, நியா 19:22-25, 1ராஜா14:24, 15:11-12, ரோமர் 1:20-32, 1கொரி 6:9-10, 1தீமோ 1:9-10, 2தீமோ 3:1-5, யூதா 7 **17** சங். 51:5, ரோமர் 3:10-12, 23 **18** மத். 26:63-64, 27:54, லூக்கா 1:30-33, யோவான் 9:35-37, ரோமர் 1:3-4 **19** அப். 4:12, 20:28, ரோமர் 3:25, 1யோவான் 1:7, வெளி. 5:9 **20** சங். 16:9-10, மத். 28:5-7, மாற்கு 16:9,12,14, யோவான் 2:19, 21, 10:17-18, 11:25, அப். 2:24, 3:15, ரோமர் 8:11, 1கொரி. 15:3-7 **21** லூக்கா 22:69, அப். 2:25-36, எபி. 10:12-13 **22** 1கொரி. 3:16, வெளி. 3:20 **23** எபே. 2:13-22, எபி. 9:22, 13:12, 20-21, 1யோவான் 1:7, வெளி. 1:5, 7:14 **24** மத். 26:28, அப். 2:21, 4:12, எபே. 1:7, கொலோ. 1:14 **25** மத். 21:22, யோவான் 6:35, 37-40, ரோமர் 10:13 **26** எபி. 11:6 **27** யோவான் 5:14, 8:11, ரோமர் 6:4, 1கொரி. 15:10, வெளி. 7:14, 22:14 **28** மத். 28:18-20, யோவான் 3:5, அப். 2:38, 19:3-5 **29** உபா. 4:29, 13:4, 26:16, யோசுவா 1:8, 22:5, 2தீமோ. 2:15, 3:14-17, யாக்கோபு 1:22-25, வெளி. 3:18

*மேலும் விபரங்களுக்கு அல்லது ஆர்வமாயிருக்கிற பிற தலைப்புகளிலுள்ள புத்தகங்களுக்கு தயவுகூர்ந்து எங்களை தொடர்பு கொள்ளவும்.*

Tony Alamo, World Pastor, Tony Alamo Christian Ministries Worldwide • P.O. Box 2948, Hollywood, CA 90078
இருபத்து நான்கு மணிநேர ஜெப மற்றும் தகவல் தொடர்பு எண்: +1 (661) 252-5686 • பேக்ஸ் +1 (661) 252-4362
www.alamoministries.com • taoffice@alamoministries.com

*டோனி அலமோ உலகளாவிய கிறிஸ்தவ ஊழியங்களானது முழு உள்ளத்தோடும் ஆத்துமாவோடும் மனதோடும் மற்றும் முழு பலத்தோடும் கர்த்தருக்கு உண்மையிலேயே ஊழியம் செய்ய விரும்புகிறவர்கள் எங்களுடைய அமெரிக்க ஐக்கிய பகுதியில் இருக்கிற யாவரும் வாழ்வதற்குத் தேவையான பொருட்களோடு கூடிய ஒரு இடத்தை வழங்குகிறது.*

நியு யார்க் நகரத்தில் ஒவ்வொரு செவ்வாய் கிழமையும் மாலை 8 மணிக்கு மற்றும் பிற இடங்களில் தினமும் இரவிலும் ஆராதனைகள் நடத்தப்படுகிறது. தகவலுக்கு தயவுகூர்ந்து +1 (908) 937-5723 ஐ அழையுங்கள். ஒவ்வொரு ஆராதனைக்குப் பிறகும் உணவு பரிமாறப்படுகிறது. 333க்கு மேலான தீர்க்கதரிசனங்களில் வெளிப்படுத்தப்பட்ட பழைய ஏற்பாட்டிலிருந்து கிறிஸ்துவைக் வெளிப்படுத்துகிற போதகர் அலமோவினுடைய புத்தகமான மேசியாவைக் கேளுங்கள்.

*போதகர் அலமோ அவர்களுடைய புத்தகங்களை விநியோகிக்கிறவர்களாகி ஆத்துமாக்களை அறுவடை செய்யும் பணியாளராகுங்கள். எங்களுடைய எல்லாப் புத்தகங்களும் ஒலிவடிவ செய்திகளும் அனுப்புவது உட்பட்ட செலவுகளும் இலவசமே.அவைகளுக்காக உங்களிடம் யாராவது கட்டணம் வசூலிக்க முற்பட்டால், தயவுகூர்ந்து கலெக்ட் நிறுவனத்தை இந்த எண்ணில் +1 (661) 252-5686 அழைக்கவும்.*

இந்த புத்தகம் இரட்சிப்பின் மெய்யான திட்டத்தைக் கொண்டிருக்கிறது (அப். 4:12).
இதைத் தூர வீசி எறியாதீர்கள், வேறு யாரிடமாவது கொடுக்கவும்.

பிற நாடுகளில் இருக்கிறவர்கள் தங்கள் சொந்த மொழியில் இந்தப் புத்தகத்தை மொழிபெயர்க்க நாங்கள் உற்சாகப்படுத்துகிறோம். நீங்கள் அச்சிட்டால், தயவுகூர்ந்து இந்தக் காப்புரிமையையும் பதிவையும் சேர்த்துக்கொள்ளுங்கள்:

© காப்புரிமை ஏப்ரல் 2011, 2015 எல்லாக் காப்புரிமையும் உலகப் போதகர் டோனி அலமோவுக்கே உரியதாகும். ® பதிவு செய்யப்பட்டது மார்ச் 2011, 2015

TAMIL—VOLUME 12700—*TO HAVE CHRIST IN YOU*